# இனப்பிரச்னைதீர்வுக மத்தியஸ்தம் வகிக்க 'ஆவலி'


விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 04 இதழ் 39
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 18-3-1995


## விருப்பம்தெரிவிப்பு

(கன்பரா)

இலங்கை இனப் பிரச்னைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடைபெறவேண்டிய பேச்சு வார்த்தைகள் தடைப்பட்டிருக்கும் நிலையில் இருதரப்புக்கும் இடையே மத்தியஸ்தம் செய்ய தாம் தயாராக இருப்பதாக அவுஸ்திரேலியா அறி

(4-ம் பக்கம் பார்க்க)

சமாதான பேச்சு குறித்து:

## நோர்வே அமைச்சருக்கு கதிர்காமர் விளக்கம்!

(கொழும்பு)

அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்குமிடையே மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சு வார்த்தையின் விபரங்கள் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நோர்வே இராஜாங்க அமைச்சர் மக்பீசனுக்கு விரிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

தற்போது கடைப்பிடிக்கப் பட்டுவரும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நிறைவேறுவதற்கு நோர்வே அரசாங்கம் வழங்

(4ம் பக்கம் பார்க்க)

# மார்ச் 28க்குள் சாதகமானபதில் கிடைக்காவிட்டால் சமாதான பேச்சுக்கள் குறித்து வேதனையான முடிவுஎடுக்க நிர்ப்பந்திக்கபடுவோம்

## தலைவர் பிரபா ஜனாதிபதிக்கு கடிதம்



[யாழ்ப்பாணம்]

சமாதானம் என்ற உன்னத இலட்சியத்திற்காக நீங்கள் எடுத்துள்ள முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு நாம் உங்களை மீண்டும் வேண்டிக்கொள்கின்றோம். 1995 மார்ச் 28-ம் திகதிக்கு முன்னராக உங்களிடமிருந்து ஒரு சாதகமான பதிலை நாம் பெறாத பட்சத்தில் சமாதானப் பேச்சுக்களை தொடர்வதா இல்லையா என்பது சம்பந்தமான மிகவும் வேதனைக்குரிய ஒரு முடிவை நாம் எடுத்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவோம். இவ்வாறு தமிழீழ தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்!

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உங்கள் 09-03-1995 திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்தது. மிகவும் நன்றி. உங்களது கடிதத்தின் முதற்பகுதி விடுதலைப் புலிகளின் சர்வதேசச செயலகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றின் உள்ளடக்கம் பற்றி குறிப்பிடுகின்றது. ஒரு நடுவரின் மத்தியஸ்துவம் சம்பந்தமாக நீங்கள் தெரிவித்த யோசனையை இந்த அறிக்கை திரிபுபடுத்தியிருப்பதாக எழுதியிருக்கின்றீர்கள், இந்த விடயம் சம்பந்தமாக நான் உங்களுக்கு அதிகாரபூர்வமான முறையில் எழுதிய கடிதத்தை நீங்கள் கருத்தில எடுத்துக் கொள்வதுதான் உகந்தது.

### காலதாமதமாகலாம்

சமாதானப்பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஒரு உண்மையான சமாதான சூழல் ஏற்பட வேண்டும் எனவும் மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்பவேண்டுமெனவும் நாம் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வருகின்றோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் இந்த நிலைப்பாட்டை மேற்கொண்டமைக்கு சில பிரத்தியேக காரணிகள் உள்ளன

மிகவும் சிக்கலான இனப் பிரச்னைக்கு சமாதானப்பேச்சு மூலம் தீர்வு காணபதற்கு சில சிரமங்கள் ஏற்படுவதுடன் காலதாமதமும் ஆகலாம். இதனால் தான் ஒரு நிலையான போர்நிறுத்தத்தின் அடிப்படையில் நின்றுபிடிக்கக்கூடிய ஒரு சமாதான சூழல் தோற்றுவிக்கப்படவேண்டும் என்பது எமது கருத்து. முன்பு நிகழ்ந்த

(4ம் பக்கம் பார்க்க)

## ராமதாஸ் கைது

(சென்னை)

சென்னையில் நேற்று இடம் பெற்ற ஆர்ப்பாட்டப்பேரணியில, வன்செயல் நிகழ்ந்தமை காரணமாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் எஸ். ராமதாஸ் உட்பட 46பேர் கைதுசெய்யப்பட்டனர்.

தடா சட்டத்தை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை பாட்டாளி மக்கள் கட்சி ஒழுங்கு செய்திருந்தது.

தடையைமீறி ஊர்வலம் சென்றபோது பொலிசாருக்கும், ஆர்ப்பாட்டப்பேரணியில் கலந்து கொண்டவர்களுக்குமிடையில் வன்செயல் இடம்பெற்றதென்றும் இதில் த்துப் பொலிசார் காயமடைந்தனர் என்றும் கல்லெறிச் சம்பவங்களினால் 10 பஸ் வண்டிகளும் சேதமடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ம

காங்கேசன்

## துறைமுக அபிவிருத்திக்கு 4 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

காங்கேசன்துறை துறைமுக புனர் நிர்மாண வேலைகளுக்கு நான்கு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சா எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்தார்.

துறைமுகங்கள், கப்பல் துறை புனர்வாழ்வு நிர்மாண அமைச்சின் நிதி ஒதுக்கீடு விவாதத்தை முடித்துவைத்துப் பேசும்பேதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகம் உட்பட சகல துறைமுகங்

(4ம் பக்கம் பார்க்க)

## அரசியல்தீர்வு யோசனைகளை புலிகளுக்கு அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

பொ. ஐ. மு. அரசு தயாரித்துள்ள அரசியல் தீர்வு யோசனைகளை அடுத்த வாரம் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுசெய்யபபட்டுள்ளதுஎன்றுகொழும்புப் பத்திரிகைஒன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சடந்த வார இறுதியில் தலைவர் பிரபாகரனுச்கு அனுப்பி வைத்த கடிதத்திற்கு விடுதலைப் புலிகள் நேற்று பதில் கடிதம் அனுப்பியிருந்தனர்.

இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு யோசனைகள் தொடர்பாக அரசியல் நிபுணர்கள், சட்ட வல்லுநர் பலரிடமிருந்தும் ஆலோசனை பெறப்பட்டதா வும் தெரியவருகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்ஊடாக இந்த அரசியல் தீர்வு யோசனைகள் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப் படும்.

இந்த யோசனைகள் குறித்த மேலதிக விபரங்கள்பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

மரி

## நோர்வே பத்திரிகையாளர் குழு இலங்கை விஜயம்

(கொழும்பு)

நோர்வே பத்திரிகையாளர்கள் 16 பேர் கொழும்புக்கு வருகை தந்துள்ளனர்.

சமாதான நடவடிக்கைகளை கவனிக்கும்பொருட்டுஅரசியல் நிலைபற்ஆராயும் பொருட்டும், இந்தபத்திரிகையாளர்கள் இலங்கைவந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுறது.

இக்குழுவினர் இலங்கையில் சில நாட்கள் தங்கியிருந்து மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டவுள்ளனர்.

நோர்வேயில் புகலிடம் கோரியுள்ள இலங்கை அகதிகள் நிலைபற்றியும் இப்பத்திரிகையாளர் குழு தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் என தெரியவருகிறது.

நோர்வே அரசின் ஏற்பாட்டின் கீழ் இப்பத்திரிகையாளர் குழு கொழும்பு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. - ம-ரி

## கேரள மாநில முதல்வர் நேற்று இராஜினாமா

(திருவனந்தபுரம்)

கேரள மாநிலத்தின் முதலமைச்சர் கே. கருணாகரன் நேற்று கமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

திரு. கருணாகரன் நேற்று தமது பதவியை திடீரென்று ராஜினாமாச் செய்ததினால கேரள மாநில சட்ட சபையில் நேற்று சமர்ப்பிக்கப்பட இருந்த பட்ஜட்டை சபாநாயகர் ஒத்திவைத்தார்

முலமைச்சர் கே. கருணாகரன் நேற்று தமது ராஜினாமாக்கடிதத்தை ஆளுநரிடம் சமர்ப்பித்தபோது மாற்று ஏற்பாடுகள் செய்யும் வரை முதலமைச்சர் பதவியில் தொடர்ந்து இருக்கும்படி ஆளுநர் திரு. கருணாகரனிடம் கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து திரு. கே. கருணாகரன் அவசரஅவமாக புதுடில்லிக்குச்சென்று பிரதமர் நரசிம்மராவை சந்தித்து கேரளாவின் நிலைமையை விளக்கிக்கூறியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வி-ரி

# தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

நடாத்தும்

# உற்பத்தி எழுச்சி வாரம் - 1995

★ உற்பத்திக்கு கௌரவிப்பு

★ உற்பத்தியாளருக்கு ஊக்கம்

★ உற்பத்தி திறனுக்கு உன்னத பரிசில்கள்

★ ஆண்டுதோறும் தொடர்வது இந்நிகழ்வு

காலம்: 1995 சித்திரை 24-ம் நாள் முதல் 30-ம் நாள் வரை

மாவட்ட ரீதியாக நடைபெறும் போட்டிகள்

**விவசாய போட்டிகள்**

நிலம் உழுதல்
நிலம் கொத்துதல்
துலா மிதித்தல்
மாட்டு வண்டி சவாரிப் போட்டி

**கடல்வள போட்டிகள்**

நீச்சல்
துடுப்பு வலித்தல்
பாய்மரம் ஓட்டுதல்
வலை பின்னுதல்
தண்டு வலித்தல்

**விண்ணப்ப முடிவுத் திகதி:**
**01 . 04 . 95**
**போட்டிகள் யாவும்**
**10.04.95ம் திகதி ஆரம்பமாகும்**

**பனை தென்னைவள அபிவிருத்தி தொடர்பான போட்டிகள்**

குட்டான் இழைத்தல்
கிடுகு பின்னுதல்
பனை மரம் ஏறுதல்

**சிறு கைத்தொழில் போட்டிகள்**

கயிறு முறுக்குதல்
தும்புத்தடி கட்டுதல்
ஈர்க்குக்கட்டு கட்டுதல்

**பொதுவான போட்டிகள்**

வீதி திருத்துதல்
வாய்க்கால் திருத்துதல்
குளம் புனரமைப்பு

போட்டி விதிகளையும், விண்ணப்பப் படிவங்களையும் உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

## தொழில் சிறக்கும், தமிழீழம் பிறக்கும்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
அரசியல் துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள். தமிழீழம்.

(ஏ 4822)

### மணிவாக்கு

பண்பாடு உள்ளவர்களிடம் கவர்ச்சியான நடத்தை இருக்கும். பண்பாடு இல்லாதவர்களிடம் கவர்ச்சியான பேச்சு மட்டுமே இருக்கும்.

- கன்பூசியஸ்

# யாழ்ப்பாணம் அனுப்பக்கோரி 46 புலிகள் உண்ணாவிரதம்

## — வேலூர் சிறையில் இருக்கிறார்கள்

(சென்னை)

தங்களை இலங்கைக்கு அனுப்புமாறு உண்ணாவிரதம் இருந்துவரும் விடுதலைப் புலிகளில், நான்கு பேரின் உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளது என்று தெரிவிக்கப் படுகிறது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது; வேலூர் கோட்டை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் 46 பேர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

மாவட்டப் பொலிஸ் கண்காணிப்பாளர், வருவாய்த் துறை அதிகாரி ஆகியோர் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கோரியும் அவர்கள் மறுப்புத் தெரிவித்துதொடர்ந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகிறார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ம-சி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995—03-18

சனி இரவு

08-02 புரட்சிக்குரல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08-20 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
03-40 கலந்துரையாடுவோம் நிகழ்ச்சியில் 'இன்றைய சிறுகதைகள்''

1995-03-19

ஞாயிறு காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-03-18

சனி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் வினுடி வினுப் போட்டி
06-00 சிந்தனைக்குச் சில வினுடிகள்
06-02 பாமாலை
06-15 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## நமது நோக்கு

### இதுதான் பேராண்மை

மனிதாபிமான அடிப்படையில் இரு போர்க் கைதிகள் தேசியத் தலைவரால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமது விடுதலை தொடர்பாக இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி போர்க் கைதிகள் உண்ணாவிரதம் இருந்தனர்.

அரசோ எதுவித நடவடிக்கையும் எடுக்காது பாராமுகமாக இருந்து வந்தது.

தென்னிலங்கையைச் சேர்ந்த பிரமுகர்களும், பத்திரிகையாளர்களும், மதத் தலைவர்களும நிலைமையறிந்திட வந்தனர்.

ஆயரிடம் இருவரை விடுவித்த செயல தமிழ் மக்கள் போர் வெறி கொண்டவர்கள் அல்ல மனிதாபிமானம் மிக்கவர்கள் என்பதையும் உலகிற்கு மீண்டும் ஒருமுறை தெரியப்படுத்தும் வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது.

''பேராண்மை என்பது
தறுகண் ஒன்று
உற்றக்கால்
ஊராண்மை மற்று
அதன் எஃகு!''

என்பது வள்ளுவன் வகுத்த தமிழ்ப் பண்பாட்டு நெறி.

பகைவராக இருந்தாலும் அவர்களுக்கு ஒரு தாழ்வு வந்தால், கண்ணேடி, அது தீர்க்கும் சிறப்புச் செய்வதே பேராண்மை.

தமது உரிமைகளை நிலை நாட்டவே தமிழ் மக்கள் போராடி வருகிறார்கள். இதனை விளங்காது, அந்த நீதியான கோரிக்கைகளை உதாசீனம் செய்து அடக்கி ஆளப் படையினரை ஏவி வருகிறது அரசு.

எய்தவனிருக்க அம்பை நோகலாமா? சிங்களப் பௌத்த பேரினவாதிகள் படைகளை ஏவி இடுக்கண் பலவற்றை விளைவித்து வந்தனர்.

அப்போது - படையினரைக் கைப்பற்றி யுத்தக் கைதிகளாக வைத்திருந்தனர். தம்மை விடுவிக்கக் கோரிப் பல தடவைகள் முயன்றும் அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

உண்ணாவிரதம் இருந்து உயிர் போக்க முயன்றவர்களில் இருவரை விடுவித்து பேராண்மை இதுதான் என்று தெளிவாக்கியிருக்கிறார் தலைவர்.

பண்பட்ட சமுதாயம், பல இன்னல்களைச் சந்தித்துத் தாழ்ச்சியுற்ற போதும், பண்புகளை மறக்கவில்லை என்பதற்கு இந்த நிகழ்ச்சி சான்றல்லவா?

### புலதும் பத்தும்

#### தும்பளை

சில ஊர்ப் பெயர்கள் காரணப் பெயர்களாக அமைந்துள்ளனவல்லவா? தும்பளைக் கிராமத்தின் பெயர் எப்படி வந்தது? தும்பு+அளை என பிரித்தாற் புரியும். அளை என்பது வாய்க்கால் அல்லது ஓடை.

முன்பு.........இக் கிராமத்தில்..... தும்புக் கைத்தொழில் இருந்தது. தேங்காய் மட்டையிலிருந்து தும்பை பிரித்தெடுக்க ஒரிரு வாரங்கள் நீரில் ஊறப் போடவேண்டும். சிறு ஓடைகளை வெட்டி, நீர்ப் யாய்ச்சி, மட்டைகளை ஊற போட்டார்களாம். தும்பு ஆலைகள் இருந்த காரணத்தால் தும்பளை என பெயர் வந்தது.

தும்பை அளைந்து அளைந்து தொழில் செய்த காரணத்தால் தும்பளை என்ற பெயர் வந்தது என இன்னோர் விளக்கமும் கூறப்படுகிறது. ஊர்ப் பெயர், ஆய்வு சில கைத்தொழில்களை நினைவுபடுத்தி மீண்டும் தழைத்திட உதவுமல்லவா?

— மயூரன்

போலியோவுக்கு

## இரு தடவை தடுப்பூசி குழந்தை மரணம்

(கொழும்பு)

இருதடவைகள் போலியோ தடுப்பூசி போடப்பட்டதை யடுத்து மூன்று மாதபச்சிளம் குழந்தையொன்று பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் பலாங்கொடைப்பகுதியில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இப்பகுதியில் சுகாதார பணியை மேற்கொண்டோரின்அறிவிப்பையடுத்தே பிரஸ்தாபகுழந்தைக்கு இருதடவைகள் தடுப்பூசி போடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகவும் மரணமடைந்தது ஒரு தமிழ் குழந்தை என்றும் தெரிவிக்கப்படுகிறது. -க

## புலிகள் தப்பியது பற்றி தீவிர விசாரணை

(சென்னை)

சென்னை மத்திய சிறைச் சாலையிலிருந்து, தடுத்து வைக்கப்பட்ட விடுதலைப்புலிகள் தப்பி சென்றது பற்றி தமிழக பொலிசார் தீவிரநடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் உரையாற்றுகையில் தப்பிச்சென்றவர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் சென்னை மத்திய சிறைச்சாலையின் பாதுகாப்புப்பலப் படுத்தப்பட்டுள்ளதாகவும் சிறைகண்காணிப்பாளர் உட்பட 7 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகவும் 5 மேற்பார்வையாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார், க-சி

### வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சிச் சேவை ஓய்வூதியா நலன் புரிச்சங்கம் மூன்றாவது வருடாந்த பொதுச்கூட்டம் யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குநடைபெறும்.

### தவக்கால நற்சிந்தனை

''ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்''

ஆண்டவரின் வியத்தகு செயல்களை நினைவுகூரும் நாம் அவரிடத்தில் விளங்கும் அன்பையும் அருளையும் நினைவு கூரவேண்டும். கடலினும் பெரிய அன்பையும் அருளையும் கொண்டு விளங்குகின்றார். அன்பே உருவானவர். அருளே நிறைவானவர். அவரை அண்டிச் செல்வோம். அவரை வேண்டிக்கொள்வோம்.

— தா. மைதிலி

## இராசி பலன்

18—3—1995

சனிக்கிழமை

(தமிழுக்கு பங்குனி—04

பிரதமை காலை 6-35 வரை: துதியை வைகறை 4-53 வரை, அத்தம் மு. இ. 8-32 வரை; மரணயோகம் இராகு காலம் காலை 9-19 முதல் 10-49 வரை; சுபநேரம் காலை 3-19 முதல் 4-59 வரை.

மேடம்: மனமகிழ்ச்சி, வருவாய் அதிகரிப்பு, காரிய சமபாஷணை.

இடபம்: உறவில் விரிசல், முதியோர் தொல்லை, பணிவின்மை.

மிதுனம்: வாய்த் தர்க்கம், அடிபணிதல், முயறசி தாமதம்.

கடகம்: தொழில் சிறப்பு, குடும்ப சுகம், பயனுள்ள திட்டம்.

சிங்கம்: மாதா துயர், வீண்சச்சரவு, பணக்கஷ்டம்.

கன்னி: அறிஞர் ஆசி, தானதர்மம், வெளியார் உதவி,

துலாம், பழைய சிந்தனை, அதிகாரிகள் சினம், வேலைப் பழு.

விருச்சிகம்: பணியாள் ஒத்துழைப்பு, பொது நோக்கு, பணவரவு.

தனுசு: சகோதர பாசம். சுபகாரியம், கடமை உணர்வு.

மகரம்: மனச் சஞ்சலம், பெண் பகை, காரிய தாமதம்.

கும்பம்: பயணத தடை, குடும்பப் பிரிவு, வாக்குப்பகை

மீனம்: சிந்தனைத் தெளிவு, பெரியோர் நட்பு விருந்துண்ணல்.

— ஜோஸ்யர்


யாழ்ப்பாண மாநகரசபை

## கேள்வி அறிவித்தல் - 1995

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட இறைச்சிக்கடைகள் 1 - 4 - 1995-ம் திகதி முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கு கேள்விகள் மீளக் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவங்களை மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா 100/-ம் மீளப்பெறக்கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபா 2500/-ம் செலுத்தி 23 - 03 - 95-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விகள் 24 - 03 - 95-ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் சேர்க்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை யாழ். மாநகரசபையின் நானுவித இறைவரிப்பகுதியில் அறிந்துகொள்ளலாம்.

அட்டவணை — 1

| | இறைச்சிக் கடைகள் | குத்தகை காலம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மாதவாடகை |
|---|---|---|---|---|
| 1. | கொட்டடி ஆட்டிறைச்சிக் கடை இல. 01 | 9 மாதம் | 4275-00 | 112-50 |
| 2. | குருநகர் ஆட்டிறைச்சிக் கடை இல: 07 | ,, | 10375-00 | 195-00 |
| 3. | நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை இல. 08 | ,, | 3130-00 | 200 00 |
| 4. | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை இல. 09 | ,, | 3975-00 | 200-00 |
| 5. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல. 05 | ,, | 6080-00 | 200-00 |

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1995 - 03 - 17.

(ஏ-4831)


இயற்கை எம் உடமை - அதைக் காப்பது நம் கடமை

# மார்ச் 28க்குள் சாதகமான

(1ம் பக்கத் தொடர்ச்சி) அரசியல் பேச்சுக்கள் நிலையற்ற போர் நிறுத்தங்களாலும் அதனால் விளைந்த போர் நிறுத்த மீறல்களாலும் இடைநடுவே முறிந்துபோயின என்பதை நீங்கள் அவதானித்திருக்கலாம். எனவே நிலையான போர்நிறுத்தத்தைத் தோற்றுவிக்கும் எமது யோசனையை உங்களது அரசு பாரதூரமான விடயமாக எடுக்கவில்லை என்பதை மிகவும் வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அரசாங்கத்தின் அணுகுமுறையில் இருந்து இது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. போர்நிறுத்தம் என்ற கோட்பாட்டை அதன் முழுமையான அர்த்த பரிமாணத்தில் பிரயோகிப்பதற்கு அரசு மறுத்ததுடன் மோதல் தவிர்ப்பு என்ற சொற்பதத்தை பிரயோகிக்க விரும்பியது. இது ஒரு இடைக்கால சண்டைத்தவிர்ப்பு நிலைமையையே குறிக்கும். அத்துடன் போர்நிறுத்த செயற்பாட்டு வழிமுறை பற்றி விரிவாக ஆராய்ந்து ஒரு இணக்கப்பாடு காணவேண்டும் என நாம் பல தடவைகள் விடுத்த கோரிக்கைகளையும் அரசாங்கம் உதாசீனம் செய்து வந்திருக்கின்றது. ஒரு நிலையான சமாதான சூழலை உருவாக்கம் செய்வதில் உங்களது அரசிற்கு எவ்வித அக்கறையோ அல்லது சிரத்தையோ இருப்பதாகத் தெரியவில்லை.

### போரியல் நலன்களுக்கு முன்னுரிமை

முன்னைய அரசின் இனவாத ஒடுக்குமுறைக் கொள்கையாலும், ஈவிரக்கமற்ற இராணுவ அணுகுமுறையாலும் வடகிழக்கில்வாழும் எமது மக்களின் இயல்பான வாழ்வு மிகவும் மோசமான முறையில் சீர்குலைந்துள்ளது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். தமிழர் தாயகம் மீது இராணுவ மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் நோக்கில் எமது மக்களின் சமூக பொருளாதார வாழ்வுமீது பல்வேறு ரகமான தடைகளும், கட்டுபபாடுகளும் விதிககப்பட்டன.

### அரசியல் சிக்கல்களுக்கு முன்னுரிமை

இதன் விளைவாக எமது மக்கள் தாங்கொணாத் துன்பங்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளானார்கள். ஆயினும உங்களது புதிய அரசு சமாதான மனுவுடன் ஆட்சிபீடம் ஏறிய பொழுது எமது மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கை பிறந்தது. உங்களது அரசு சமாதான சூழலையும் இயல்பு நிலையையும் தோற்றுவித்து தாம் அனுபவித்து வந்த துன்பங்களைத் துடைத்துவிடும் என எமது மக்கள் எதிர்பார்த்தார்கள். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் நாமும் ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகளில் மக்களின் அன்றாடப் பிரச்னைகளுக்கு தீர்வு காணவேண்டும் என உங்களிடம் கேட்டுக்கொண்டோம். எமது மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கு அவசரத் தேவைகளாக உள்ள சில முக்கிய பிரச்னைகளை ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகளில் நாம் சுட்டிக்காட்டியதோடு அவற்றை உடனடியாகத் தீர்த்து வைக்குமாறும் கேட்டுக்கொண்டோம். இவை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தனிப்பட்ட நிபந்தனைகள் அல்ல என்பதை நாம் மீண்டும்-மீண்டும் வலியுறுத்தியதோடு. இவை மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகிய ஒரு மக்கள் சமூகத்தின் மனிதாபிமானத் தேவைகள் என்பதையும் சுட்டிக்காட்டினேம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இயல்பு நிலைமை தோன்றுவதாக இருந்தால் இப்பிரச்னைகளுக்கு உடன் பரிகாரம் காணப்பட வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தோம். தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஆரம்ப கட்டப் பேச்சுக்களின் போது அரசாங்கம் உறுதி அளித்தது. ஆயினும், பின்னர் இந்த அன்றாட பிரச்னைகளை ஓரம்கட்டி விட்டு இனப்பிரச்னைக்கு அடிப்படையான அரசியல் சிக்கல்களுக்கு முதன்மை கொடுக்க அரசு முனைந்தது. அரசின் இந்த நிலைப்பாட்டு மாற்றம் சம்பந்தமாக நாம் பல கடிதங்களில் சுட்டிக் காட்டியதுடன், இராணுவத் தலைமையை திருப்திப்படுத்தும் நோக்கில்தான் இந்த நிலைப்பாட்டு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்பதையும் எடுத்துரைத்தோம். அத்துடன் ஒரு மக்கள் சமுதாயத்தின் ஜீவாதாரப் பிரச்னைகளுக்கு மேலானதாக இராணுவத்தின் போரியல் நலன்களுக்கு முதன்மை கொடுப்பது சமாதான வழிமுறைக்கு பெரும் பங்கத்தை ஏற்படுத்தும் எனவும் சுட்டிக் காட்டினேம்.

### எமது பார்வை சரியானது

இந்த விடயத்தில் எமது பார்வை சரியானது என்பதையும் இராணுவ நலனுக்கு நீங்கள் மேலுரிமை கொடுக்கின்றீர்கள் என்பதையும் உங்களது கடைசிக் கடிதம் நிரூபித்துக் காட்டுகின்றது. விடுதலைப்புலிகள் இயக்கம் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவு செய்தால் அது பாரதூரமான இராணுவ விளைவுகளை ஏற்படுத்தும்'' என நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள், ஆனால் நாங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளோ மக்களின் அன்றாட — அவசியப் பிரச்னைகள் சம்பந்தப்பட்டவை. பூநகரி இராணுவ முகாமை அகற்றி யாழ்ப்பாணத்துக்கு ஒரு பாதையைத் திறப்பது, அத்தியாவசியப் பொருட்கள் மீதான பொருளாதாரத் தடையைஅகற்றுவது, மீன்பிடித் தடையை நீக்குவது போன்ற நாம் முன்வைக்கும் கோரிக்கைகளை தேசிய பாதுகாப்புப் பிரச்னைகளாக நீங்கள் திரித்துக்காட்டி, அவற்றைத் தீர்த்து வைக்க மறுக்கின்றீர்கள். இன்னொரு வகையில் சொல்லப் போனல் எமது மக்களின் சமூக பொருளாதார வாழ்வு மீது இராணுவம் திணித்துள்ள நெருக்குவாரங்களை நீங்கள் நியாயப்படுத்த முனைவதோடு ''தேசிய பாதுகாப்பை'' பேணுவதற்கு இந்த நெருக்குதல்கள் அவசியமானவை என்றும் நீங்கள் கருதுகின்றீர்கள்.

### கவலை, ஏமாற்றம்

எமது மக்களை மிகவும் ஆழமாகப் பாதித்து நிற்கும் இந்த முக்கியமான விடயத்தில் நீங்கள் எடுத்துள்ள நிலைப்பாடு எமக்கு ஆழமான கவலையையும் ஏமாற்றத்தையும் தருகின்றது. எமது மக்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக நீங்கள் கருதும் இந்தத் தவறான நிலைப்பாட்டில் இராணுவவாதம் மட்டுமன்றி பேரினவாத அம்சங்களும் பொதிந்து கிடக்கின்றன.

### அரசியல் இலாபம்

எமது மக்களைப் பீடித்து நிற்கும் மிகவும் அவசரமான பிரச்னைகளை, தீர்த்துவைக்க முடியாத பாதுகாப்புப் பிரச்னைகளாக நீங்கள் சித்தரித்துக்காட்ட முயல்வது ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகின்றது. அதாவது, தமிழர் மீது இராணுவ—பொருளாதார நெருக்குதல்களை நீடித்து அந்த அழுத்தங்களை பேச்சுவார்த்தையின்போது பேரம் பேசி அரசியல் இலாபம் பெறும் ஒரு நோக்கத்திற்காக பயன்படுத்த எண்ணுகின்றீர்கள். இதன்காரணமாகவ்வ ஒட்டுமொத்தமான ஒரு அரசியல் தீர்வுத்திட்டத்தின்கீழ் இந்தப் பிரனைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும் என வலியுறுத்துகின்றீர்கள். உங்களது இந்த நிலைப்பாட்டை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. எமது மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் தேசிய இன முரண்பாட்டில் இருந்து எழுந்த அரசியல் சிக்கல்கள் அல்ல. இவை அனைத்தும் போருபாயத் தந்திரங்களாக இராணுவத்தினரால் உருவாக்கப்பட்டவை. எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட இந்தத் தடைகளும்-கட்டுப்பாடுகளும் இராணுவத்தின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளாகும். நியாயமற்ற மனிதாபிமானமற்ற இந்தநடவடிக்கைகள் மனிதாபிமானத்தின அடிப்படையில் தீர்த்து வைக்கப்பட வேண்டும். பிளவுபட்டு நிற்கும் இரு தேசங்கள் மத்தியில் சமாதானத்தையும், நல்லுறவையும் கட்டி எழுப்பும் நோக்கில் இவை தீர்த்து வைக்கப்படவேண்டியவை.

### அவசரமான தீர்வு காணவேண்டும்

கடந்த ஆறு மாத காலத்தில் நாம் எழுதிய பல கடிதங்களிலும் சமாதானப் பேச்சுக்களின் போதும் எமது மக்களின் நாளாந்தப் பிரச்னைகளுக்கு அவசரமான தீர்வு காணப்படவேண்டும் என வலியுறுத்தி வந்திருக்கின்றேம். நாம் நாளாந்தப் பிரச்னைகளை வலியுறுத்துவதால் இனப்பிரச்னைக்கு அடிப்படையான அரசியல்சிக்கல்கள் பற்றி நாம்பேச விரும்பவில்லை என அர்த்தப்படுத்த முடியாது அரசியல் பிரச்சனைகள் பற்றிப் பேசுவதற்கு நாம் எப்பொழுதும் மறுத்ததில்லை, எமது மக்களின் தேசிய அபிலாசைகளை நிறைவு செய்யக்கூடிய ஒரு தீர்வுத்திட்டம் சம்பந்தமாகவும் நாம் கருத்துக்களை முன்வைத்திருந்தோம். எனவே பேச்சுவார்த்தைகள் இன்று ஏற்பட்டுள்ளமந்தநிலைக்கு அரசியல் கலந்துரையாடல்கள் நடைபெறவில்லை என்பது காரணமல்ல. பாரதூரமான இராணுவ விளைவுகள்ஏற்படும் என எண்ணி எமது மக்களின் அன்றாடப் பிரச்னைகளை தீர்த்து வைக்க நீங்கள் தயக்கம் காட்டுவதே பேச்சுக்களில்ஏற்பட்ட பின்னடைவுகளுக்குக் காரணமாகும்.

### சந்தேகம் எழுவதில் நியாயம் உண்டு

உண்மையான விருப்பு இருந்தால் மிகவும் எளிதாகத் தீர்த்து வைக்கக்கூடிய எமது மக்களின் அன்றாட அவசிய பிரச்னைகளில் உங்களது அரசாங்கம் கடுமையான போக்கைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமானல் மிகவும் சிக்கலான-மிகவும் கடினமான தேசிய இனப்பிரச்னையை உங்களால் தீர்த்து வைக்க முடியுமா என்பதில எமக்கு சந்தேகம் எழுவதில் நியாயம் உண்டு அல்லவா. எனவே சமாதானம் என்ற உன்னத இலட்சியத்திற்காக நீங்கள் எடுத்துள்ள முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு நாம் உங்களை மீண்டும் வேண்டிக்கொள்கின்றேம் 1995 மார்ச் மாதம் 28ம் திகதிக்கு முன்னராக உங்களிடமிருந்து ஒரு சாதகமான பதிலை நாம்பெறாத பட்சத்தில் சமாதானப் பேச்சுக்களை தொடர்வதா, இல்லையா என்பது சம்பந்தமான மிகவும் வேதனைக்குரிய ஒரு முடிவை நாம் எடுத்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவோம் உங்களிடமிருந்து விரைவான பதிலை எதிர்பார்க்கின்றேம். வி-ரி

# வடக்கு-கிழக்கு யுத்தத்தில் 35,000 படையினர் உயிரிழப்பு

(கொழும்பு)

வடக்கு கிழககு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 35,000 அரச படையினர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இந்தியா, பிரிட்டன், இஸ்ரேல், தென்னபிரிக்க போன்ற பல நாடுகளில இலங்கைப் படையினர் பயிற்சிகள் பெற்றுள்ள போதிலும் விடுதலைப் புலிகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத நிலையிலுள்ளனர்.

கெரில்லா போருக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையிலே படையினர் சண்டைகளின் போது பெருமளவில் கொல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாவது ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே பலியாகும் படையினர் எண்ணிக்கை அதிகரித்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை இந்த யுத்தம் காரணமாக அங்கவீனமடைந்த படையினரின் எண்ணிக்கையும் அதிகமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது

யுத்தம் தொடங்கிய நாளிலிருந்து இன்று வரையும் இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் யுத்த முனைகளிலிருந்து தப்பியோடியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. ரி

## இன்றும் நாளையும் முதலுதவி வீதிபோக்குவரத்து பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நிர்வாக சேவையின் மோட்டார் வாகன ஓட்டுனருக்கான அனுமதி வழங்கும் பிரிவினர் நடாத்தும் மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பித்தோர்க்கான முதலுதவி வீதிப் போக்குவரத்துப் பயிற்சி வகுப்பு இன்றும் நாளையும் பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர்வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறும். இப்பயிற்சி வகுப்பில் 4 3-95 தொடக்கம் 11-3-95 வரை விண்ணப்பம் சமர்ப்பித்தோரை பங்குபற்றுமாறு தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுள்ளனர், ரி

### இரு பெரிய கிரிக்கெட் போட்டிகள்:

## சென்றல் 71-6
## சென். பற்றிக்ஸ் 218-8

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று ஆரம்பமான சென்றல்- சென். ஜோன்ஸ் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டம் முடிவடையும் போதும் சென்றல் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 71 ஓட்டங்களை மட்டும்பெற்று ஒரு இக்கட்டான நிலையிலிருக்கின்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் முதல் இன்னிங்ஸில் மொத்தம் 232 ஓட்டங்களைப் பெற்றது.

இதைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென்றலின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்கள் அனைவரும் சென். ஜோன்ஸ் அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இவர்கள் ஒரு கட்டத்தில் 27 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### சென். பற்றிக்ஸ்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும்- சென்-பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில ஆரம்பமான 78வவருடாந்தப் போட்டியில் நேற்றைய ஆட்டம் முடிவடையும் போது சென். பற்றிக்ஸ் 8-விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 218 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான இப்போட்டியின் ஆரம்பத்தில் சென். பற்றிக்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்டக்காரர்கள் ஓட்டங்களை மிக மெதுவாக எடுத்திருந்த போதிலும் பின்னணி வீரர்கள் வேகமாக ஓட்டங்களைச் சேகரித்து குறிப்பிடத்தக்கது

மேற்படி இரு ஆட்டங்களின் 2ம் நாள் ஆட்டம் இன்று காலை 8-45க்கு மீண்டும் ஆரம்பமாகும். வி-ரி

### சமாதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிய உதவிக்கும் வெளிவிவகார அமைச்சர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

நான்குநாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த நோர்வே இராஜாங்க அமைச்சர் இலங்கை உயர்மட்ட அதிகாரிகள் அமைச்சர்கள் ஆகியோருடனான சந்திப்பை முடித்துக்கொண்டு இவ்வாரக் கடைசியில் நோர்வே பயணமாகவுள்ளார். க ரி

### காங்கேசன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் துரித திட்டமொன்றின் கீழ் மேலும் அபிவிருத்தி செய்யப்படும்.

திருகோணமலையில் கப்பல்கள் நங்கூரமிடுவதற்கு வசதிகள் செய்துகொடுக்கப்படும். -கே-இ

### இனப்பிரச்னைக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளது.

1990 ல் இதுபோன்ற மத்தியஸ்த முயற்சியில் அவுஸ்திரேலியா ஈடுபட விருப்பம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு நீண்டகாலமாகவே ஆதரவு தெரிவித்து வருகின்றது.

இனப்பிரச்னைக்கு சமாதான தீர்வுகாண தொடர்ந்தும் தளரா முயற்சியுடன் ஈடுபடுமாறு இலங்கை அரசாங்கத்திடமும் விடுதலைப் புலிகளிடமும் அவுஸ்திரேலிய அரசாங்கம் வலியுறுதியிருகிறது.

இம்முன்னேற்றத்தைப் பாதிக்காதவகையிலும் சமாதானத்துக்கான உணர்வு அற்றுப்போகாத வகையிலும் நாட்டின் நலனை உத்தேசித்தும் பேச்சுககளை தொடர்ந்து மேற்கொள்ளவேண்டுமென்றும் மேலும் தெரிவித்துள்ளது க வி ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-